SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-http://sond.lk/online/

Face book:- SOND

(https://www.facebook.com/sondngo?fre=ts)

மாதாந்த அறிக்கை

வைகாசி, 2015

Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

435/09 A,
Temple Road
Nallur, Jaffna

யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டுவிபரம் கீழ்வருமாறு.

இயற்கை விவசாய பண்ணை

பல்லப்பை இயற்கை விவசாய பண்ணையில் ஏற்கனவே பயிரிடப்பட்டபயிர்கள் பராமரிக்கப்படுவதோடு இம்மாதத்தில் கராம்பு, கத்தரி, பாக்கு, தேசி, தக்காளி, பூக்கோவா, இராசவள்ளி, பூசணி, மிளகாய் என்பன புதிதாக பயிரிடப்பட்டுள்ளன.

சேதன சான்றிதழ் வழங்குவது தொடர்பாக **Sricert** நிறுவனம் வழங்கிய விபரப்பதிவேடு பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

கொய்யா, பசன், பலாவிதைகள் நாற்றுப் போடப்பட்டுள்ளதுடன் வெங்காயம், மிளகாய், கத்தரி, பயிற்றை, கீரை என்பன அறுவடை செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம்

வெடிபொருட்கள் அடையாளப்படுத்தல்

MRE செயற்றிட்டத்தில் சாவகச்சேரி, கோப்பாய், மருதங்கேணி, தெல்லிப்பளை ஆகிய 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள எழுதுமட்டுவாள், நாகர்கோவில், பளைவீமன்காமம், பலாலிதெற்கு, தனங்கிளப்பு, வளலாய், வறுத்தலைவிளான், வசாவவிளான் ஆகிய 8 கிராமசேவகர் பிரிவுகளின் செயற்பாட்டுப் பிரதேசங்களில 5 வகையிலான 63 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 15 வெடிக்காத வெடிநிலையில் உள்ள வெடிபொருட்களும் 4 மிதிவெடிகளுமாக 19 வெடிபொருட்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

விசேடசெயற்பாடாக 2015.05.02 சனிகிழமை அன்று MRE விழிப்புணர்வூட்டும் செயற்பாடானது யாழ்ப்பாணம் SLRC அலுவலக பயிற்சிமண்டபத்தில் SLRC பணியாளர்கள் மற்றும் Well Cleaning பணியாளர்களுக்காக MRE திட்ட இணைப்பாளர் அருட்செல்வம் தலைமையில் எமது பணியாளர்களினால் நடாத்தப்பட்டது. இப்பயிற்சியில் 12 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வு

02 தடைவைகள் 06வீட்டுத் தரிசிப்பினை மேற்கொண்டு 26பேருக்கு MRE விழிப்புணர்வூட்டப்பட்டது. மிதிவெடி அபாயப் பகுதிக்கு சென்று பார்வையிட்டதற்கமைவாக அங்குள்ள பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் 15நபர்களினை தொடர்பு கொண்டு மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. 45தடைவைகள் சமூகமட்டத்தில் மக்களை சந்தித்திருந்ததனூடாக 713 பேருக்கு மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வூட்டப்பட்டது.

2தடைவைகள் பாடசாலைமட்டத்தில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தொடர்பு கொண்டு 93 பேருக்குமிதிவெடிஅபாயக்கல்விவிழிப்புண்வூட்டப்பட்டது. மொத்தமாக 847 பேருக்கு பணியாளர்களினால் மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது.

செயற்பாட்டுப் பிரதேசங்களில் 12 மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வூட்டும் பதாதைகள் பொருத்தப்பட்டதுடன் 18 மிதிவெடி அபாயக்கல்விவிழிப்புணர்வூட்டும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அத்தோடு 127 மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்களுக்கான 56 நேரஅட்டவணைகளும் வழங்கப்பட்டுள்ளன.

SOND

தகவல் வளநிலையம்

இம்மாதம் உயரப்புலம் மெதடிஸ்தமிஸன் மகாவித்தியாலயம் இளையதம்பி இந்துமகாவித்தியாலயம் மற்றும் நல்லூர் மங்கயற்கரசி மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டமைக்கமைவாக அறிவியல் சார்ந்தநூல்கள், தமிழ் நாவல்கள், பெரியார் வரலாற்று நூல்கள், கல்விசார்ந்த நூல்கள் மற்றும் சமயநூல்கள் உட்பட 23 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

SONDமட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல். **(Create a Conducive Society for Good Environment for the Future).**

Create a climate change action forum

காலநிலைமாற்றம் பற்றிய குழுக் கலந்துரையாடல் 2015.05.12ம் திகதி **SOND** அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளருடைய தலைமையில் நடாத்தப்பட்டது. கீழ்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டது

1. மாவட்டஅபிவிருத்தித் திட்டத்தினைபொதுமக்களுக்குவெளிப்படுத்துவதுதொடர்பாகதிட்டமிடல் பணிப்பாளரிடம் கலந்துரையாடல்.
2. பாசிக்குடாவிடயம் தொடர்பாகதிரு. **E.** பாக்கியராஜா,திரு. **K.** குகதாஸ்,திரு. **N.** தனஞ்சயன் மற்றும் சொண்ட் அமைப்பினர் கொண்ட குழுவினர் கலந்துரையாடி அரசாங்க அதிபரைச் சந்தித்தல்.
3. உள்ளூராட்சிமன்ற செயலாளர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலின் போது ஓர் குறிப்பிட்ட நேரத்தை காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்கள் பற்றிதிரு. **A.** இருதயநாதன் அவர்களின் உதவியுடன் தெளிவுபடுத்தல்.
4. காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்கள் கொண்ட பாதைகள் தயாரித்தலும் பொது இடங்களில் அவற்றைக் காட்சிப்படுத்தலும்.
5. காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்கள் பற்றி கிராம மட்டத்தில் விழிப்பூட்டல் இதனை முதலில் டயகோனியா பங்காளர் நிறுவனங்களின் குழுக்களுக்கு நடாத்துதல்.
6. விவசாயிகளின் பாரம்பரிய அறிவுமற்றும் திறன்கள் தொடர்பான ஆவணப்படுத்தலை கலாநிதி. சுதர்சன் அவர்களின் உதவியுடன் மேற்கொள்தல்.
7. காலநிலை மாற்றம் தொடர்பான விடயங்கள் பற்றி பாடசாலை மட்டத்தில் குறுந்திரைப்படம் தயாரிக்கும் போட்டி நடாத்துதல்.

SOND

Capacity building of Farmers and women societies and Exposure visits

2015.05.18ம் திகதி விவசாய,மாதர் அமைப்புக்களுக்கிடையிலான பொதுக் கலந்துரையாடல் மட்டக்களப்பு சொண்ட் மண்டபத்தில் SOND நிறுவன திட்ட முகாமையாளர் T. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் சங்கங்கள் எவ்வாறு இயங்க வேண்டும், எவ்வாறான ஆவணங்களை கொண்டிருக்க வேண்டும் மற்றும் முறைப்படி ஆவணங்களை எவ்வாறு பேணுவது மற்றும் கலந்துரையாடல் நாடாத்தும் போதுகவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யார்,யாருடன் தொடர்புகளை பேண வேண்டும், சிறந்த சங்கமாக இருப்பதற்கு எவ்வாறான செயற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பன பற்றி கலந்துரையாடப்பட்டது.

SOND

“அபிவிருத்தியில் அரசுசாராபங்குதாரர்கள்” (NSA) திட்டம்

இத்திட்டதின் கீழ் செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராமங்களில் கிராமமட்ட அமைப்புக்களை வலுப்படுத்துவதுடன் சனசமூக நிலையங்களை புனரமைத்து இவற்றின் செயற்பாடுகளை அதிகரித்து கிராமமட்ட அபிவிருத்தியினை தடையின்றி மேற்கொள்ள உதவுதல் எனும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் மீதமாகவிருந்த 2015.05.15 வெலிகாகண்டி கிராமத்தில், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுக்கு திட்டம் பற்றி விளக்கமளிக்கும் நோக்கில் இத் திட்டத்தின் நோக்கம், அதன் பங்குதாரர்கள், பயனாளிகள், செயற்பாடுகள்,சனசமூகநிலையங்கள் அமைத்தல் போன்ற பல்வேறான விடயங்கள் பற்றி விளக்கமளிக்கும் கூட்டம் இடம்பெற்றது.

மங்களகம கிராமத்தைச் சேர்ந்த கிராமமட்ட அமைப்பிற்கான மதிப்பீடு செய்யப்பட்டது. அத்துடன் இப்பத்து திட்டக் கிராமங்களைச் சேர்ந்த கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கொள்தகுதிறனை மேம்படுத்தும் நோக்கில் கிராமமட்ட அமைப்பு நிர்வாக மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் எனும் கருப்பொருளில் 2015.05 21ம் திகதி பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இதில் 6 கிராமங்களைச் சேர்ந்த மொத்தமாக 14 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

கிராமமட்ட அமைப்பின் பிரதிநிதிகளை ஊக்கப்படுத்தி அவர்களின் செயற்பாட்டினை அதிகரிக்கும் முகமாக இவ் அமைப்பைச் சேர்ந்தவர்களுடனான தனிப்பட்ட கலந்துரையாடல்கள், இளையோருடனான சந்திப்புக்கள் என்பன இடம் பெற்றன.

சமூகஅபிவிருத்தி உத்தியோகத்தருடனான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. இதன்போது சனசமூக நிலையங்களின் தற்போதைய நிலைமற்றும் சில கிராமங்களில் இவற்றை உருவாக்குவதற்கான முன்னெடுப்புக்கள் என்பனபற்றிக் கலந்துரையாடப்பட்டன. மேலும் 2015.05.7ம் திகதிமட்டக்களப்பு ZOA, Ygro மற்றும் SOND ஆகிய அமைப்புக்களுக்கிடையிலான மாதாந்தச் சந்திப்பும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. அத்துடன் 2015.05.14ம் திகதி NSA பங்காளர்களுக்கான சந்திப்பும் கலந்துரையாடலும் தம்புள்ளையில் நடைபெற்றிருந்தது.

அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம்

எதிர்காலத்தில் சிறந்த சூழலைஉருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.
(Create a Conducive Society for Good Environment for the Future).

கிராமமட்ட அமைப்பினை மதிப்பீடு செய்தல்.

சங்கத்தின் தற்போதைய நிலமை, சங்கத்தின் தேவைகள், பிரச்சனைகள் போன்றவிடயங்களை அறியும் பொருட்டு தீவுக்காலை கிராமமறுமலர்ச்சி அமைப்பினருடைய மதீப்பீட்டுக் கலந்துரையாடலானது 2015.05.08 ம் திகதி மேற்படி அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது இதில் அமைப்பினுடைய நிருவாக உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

விவசாய உற்பத்தியாளர்களுக்கான சம்மேளனம் அமைத்தல்.

ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட விவசாயிகளை ஒன்றினைத்து விவசாய உற்பத்தியாளர்களுக்கான சம்மேளனம் ஒன்றினை அமைப்பதற்காக விவசாயசங்கங்களினதும் மற்றும் அதன் உற்பத்தியாளர்களினதும் தகவல்களைச் பெறும் பொருட்டும் மேற்படிதிட்டத்தின் விளக்கத்தினை அக்கரைப்பற்று விவசாய போதனாசிரியரிற்கு விளங்கப்படுத்தும் நோக்கிலும் 2015.05.19 ம் திகதி அக்கரைப்பற்று கமநலகேந்திர நிலையத்தில் கலந்துரையாடப்பட்டது.

நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவனமென்றால் அதுநிதியோடுதான் செயற்படும் என்ற மாயைகற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற் திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 21 ஆண்,29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள். இம் மாதம் 3 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டபோது33 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 55 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் சிறுவர்களினால் 3 நடமாடும் நூலகசேவை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 114 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு 03 திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 60 பேர் கலந்துகொண்டுள்ளார்கள்.

SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கிரிக்கெட் வெட் 10 தடவைகள் வழங்கப்பட்டது.

இம் மாதம் காந்தி கழகத்தில் 02 புதிய சிறுவர்கள் இணைத்துள்ளார்கள்.

SOND

விவசாயப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசசெயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11 ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது இப் பண்ணையில் தென்னை, வாழை, மரக்கறி பழ மரக்கன்றுகள், தானியங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது.

தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 10 தலைப்பில் 140 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

SOND

தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.